# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை

(~~Under Section 154 Cr.P.C.~~)
(~~கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்~~)
Under Section 173 BNSS

8082888

C

1. District : மாவட்டம் : தூத்துக்குடி  PS: காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி  Year: ஆண்டு **2024**  FIR No.: மு.த.அ. எண் **06/2024**  Date: நாள் **27.09.2024**

2. (i) Act சட்டம்: **PC Act, 1988 as Amended in 2018**  Sections பிரிவுகள்: **7**
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : --

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் On 26.09.2024 Before 16.20 hrs  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **27.09.2024**  Time : நேரம் **10.30 hrs**
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **27.09.2024**  Time : நேரம் 10.45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Written**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **O/o the District Manager, TASMAC,SIPCOT Thoothukudi, about 8 Kms North East**
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.S.Ramesh**  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **Shanmugaraj**
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : நாட்டினம் **Indian**  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் **Senior Revenue Inspector**  (g) Address : முகவரி **'C' Section, Collectorate, Thoothukudi.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   **(1.) Tr.P.Magesh, aged 47/2024, S/o Tr.N.Perumal, Junior Assistant, O/o the District Manager, Tamilnadu State Marketing Corporation Limited (TASMAC), SIPCOT, Thoothukudi District and 3 others.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

----

10. Total value of properties stolen / involved : ----
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: ----
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

-- Separate Sheet Enclosed --

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed **J.Anitha**.......... Rank ***Inspr of Police***.... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

27/09/24 27.9.2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

**27.09.2024 at 12.00 hrs**

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
**திரு.S. Peter Paul Durai**

Name: பெயர் S. PETER PAUL DURAI
Rank: நிலை Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

<u>தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 06/2024, பிரிவு 7 of PC Act, 1988 as Amended in 2018 – ன் தொடர்ச்சி.</u>

**<u>பணிந்தனுப்பப்படுகிறது :-</u>**

| | |
|---|---|
| 1. Tr.P.Magesh, aged 47/2024,<br>S/o Tr.N.Perumal,<br>Junior Assistant,<br>O/o the District Manager,<br>Tamilnadu State Marketing Corporation Limited (TASMAC),<br>SIPCOT, Thoothukudi District.<br><br>2. Tr.S.Lakshmanan, 53/2024,<br>S/o Tr.Soundarapandian,<br>Junior Assistant,<br>O/o the District Manager,<br>Tamilnadu State Marketing Corporation Limited (TASMAC),<br>SIPCOT, Thoothukudi District.<br><br>3. Tr.A.Sudhakaran, aged 46/2024,<br>S/o Tr.E.Arumugam,<br>Junior Assistant,<br>O/o the District Manager,<br>Tamilnadu State Marketing Corporation Limited (TASMAC) Godown, SIPCOT,<br>Thoothukudi District.<br><br>**<u>Private Individuals :</u>**<br><br>4. Tr.S.Lingaraj, aged 37/2024,<br>S/o Tr.R.Sundaravel,<br>Loadman,<br>TASMAC Godowon,<br>SIPCOT, Thoothukudi<br>Residing at : No 6/252, 4th Street,<br>Krishnarajapuram,<br>Thoothukudi. | தூத்துக்குடி மாவட்டம் சிப்காட்டில் அமைந்தள்ள தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலக ஊழியர்கள் மது விநியோகம் செய்யும் நிறுவனங்களிடம் இருந்தும் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள டாஸ்மாக் விற்பனை கடைகளில் இருந்து intend கொண்டு வரும் கடை ஊழியர்களிடம் கடைக்கு மது பாட்டில்கள் விநியோகம் செய்வதற்கும் லஞ்சமாக பணம் பெற்று வருவதாக கிடைத்த ரகசிய தகவலின்பேரில் 26.09.2024 ஆம் தேதி மாலை 16.30 மணி முதல் இரவு 22.30 மணி வரை துணை ஆய்வுக் குழு அலுவலர் நிலையில் திரு.S.ரமேஷ், முதுநிலை வருவாய் ஆய்வாளர், 'சி' பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம் அவர்களுடன் சிப்காட்டில் அமைந்துள்ள தமிழ்நாடு |

மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) தூத்துக்குடி மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் திரு.S.ரமேஷ் அவர்கள் கொடுத்த புகார் மனுவை 27.09.2024-ம் தேதி நான் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலக பணியில் இருந்தபோது காலை 10.30 மணிக்கு பெற்று தூத்துக்குடி

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 06/2024, பிரிவு 7 of PC Act 1988 as Amended in 2018-ன் படி மார்ஜினில் கண்ட எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர்: திரு.S.ரமேஷ், முதுநிலை வருவாய் ஆய்வாளர், 'சி' பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம். பெறுநர்: காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு. அய்யா, பொருள் : திடீர் தணிக்கை செயல்முறைகள் - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. ****** தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி சிப்காட் வளாகம், கதவு எண் 104 என்ற முகவரியில் தென் மேற்கு பார்த்து அமைந்துள்ள தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக் குடோன்) மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் மது விநியோகம் செய்யும் நிறுவனங்களிடம் இருந்தும் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள டாஸ்மாக் விற்பனை கடைகளில் இருந்து intend கொண்டு வரும் கடை ஊழியர்களிடம் கடைக்கு மது பாட்டில்கள் விநியோகம் செய்வதற்கும் லஞ்சமாக பணம் பெற்று வருவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக் குடோன்) அலுவலகத்தை எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் திருமதி.ம.சுதா மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் 26.09.2024-ம் தேதி மாலை 15.50 மணி முதல் 16.20 மணி வரை ரகசியமாக கண்காணித்து வந்தோம். அதில் மாவட்ட மேலாளர், டாஸ்மாக் அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் மது பாட்டில்கள் விநியோகம் செய்யும் நிறுவனங்களிடம் இருந்தும், மது பாட்டில்கள் கேட்டு intend கொண்டு வரும் கடை ஊழியர்களிடம் இருந்தும் லஞ்சம் பெற்று வருவதற்கான முகாந்திரம் தெரிய வந்ததால் 26.09.2024-ம் தேதி மாலை 16.30 மணி முதல் இரவு 22.30 மணி வரை மேற்படி அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்தோம். மேற்படி தணிக்கையின் போது மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (TASMAC) அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.P.மகேஷ் என்பவரை சோதனை செய்த போது அவரது பின்புற பேண்ட் பாக்கெட்டில் இருந்த மணிபர்சில் வைத்திருந்த பணம் ரூ.2,000/- மற்றும் அவரது வலது பக்க முன்புற பேண்ட் பாக்கெட்டில் கிழிந்த நிலையில் காணப்பட்ட காக்கி நிற கவரினுள்

வைத்திருந்த பணம் ரூ.80,000/- மற்றும் அவரது லஞ்ச் பேக்கினுள் சுருட்டப்பட்ட நிலையில் வைத்திருந்த பணம் ரூ.5,800/- ஆகியவை குறித்து அவரிடம் விளக்கம் கேட்க அவரால் உரிய விளக்கம் அளிக்க இயலாததாலும், மேற்படி பணம் ரூ.2,000/-, ரூ.80,000/-, ரூ.5,800/- மற்றும் காக்கி நிற கவர் ஆகியவை சந்தேகத்திற்கு இடமான வகையில் உரிய விளக்கமின்றி காணப்பட்டதால் லஞ்சப் பணம் என்று கருதி சந்தேகத்தின்பேரில் வழக்கு விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றினோம். மேலும் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.S.லெட்சுமணன் என்பவரை சோதனை செய்ய அவர் தங்கியிருந்த அறையிலிருந்து அவராக எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.17,800/- திரு.S.லெட்சுமணனிடம் விளக்கம் கேட்க அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லாததாலும் சந்தேகத்திற்கு இடமான வகையிலும் இருந்ததால் மது விநியோகம் செய்யும் நிறுவனங்களிடமிருந்தும், டாஸ்மாக் விற்பனை செய்யும் கடைகளில் இருந்து intend கொண்டு வரும் கடை ஊழியர்களிடம் இருந்தும் லஞ்சமாக பெற்ற பணம் என்று கருதி அந்தப் பணம் ரூ.17,800/- வழக்கு விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றினோம். மேலும், TASMAC குடோன் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.A.சுதாகரன் அவர்களை சோதனை செய்த போது அவரது பையினுள் பணம் ரூ.5,000/- சந்தேகத்திற்கு இடமான வகையில் உரிய விளக்கமின்றி காணப்பட்டதால் சந்தேகத்தின்பேரில் வழக்கு விசாரணைக்காக அந்த பணம் ரூ.5,000/- செயல்முறைகள் மூலம் கைப்பற்றினோம். மேலும், TASMAC குடோன் வாயில் அருகே நின்று கொண்டிருந்த லோடு மேன் திரு.S.லிங்கராஜ் என்பவரை சோதனை செய்த போது அவரது வலது முன் பக்க பேண்ட் பாக்கெட்டில் கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.30,000/- சந்தேகத்திற்கு இடமான வகையில் உரிய விளக்கமின்றி காணப்பட்டதால் சந்தேகத்தின்பேரில் வழக்கு விசாரணைக்காக அந்த பணம் ரூ.30,000/- செயல்முறைகள் மூலம் கைப்பற்றினோம். மேலும், மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக் குடோன்) அலுவலகப் பணியாளர்களுக்கான வருகைப்பதிவேடு செயல்முறைகள் மூலம் வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திடீர் தணிக்கையின் போது மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் மற்ற

பணியாளர்கள் மற்றும் அங்கு வந்திருந்த தனி நபர்களிடம் இருந்த பணம் குறித்து கேட்ட போது அவர்கள் அளித்த விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இருந்ததால் அந்த பணம் செயல்முறைகள் மூலம் அவர்களிடமே திருப்பி ஒப்படைத்தோம். மேலும் இந்த செயல்முறையில் கைப்பற்றப்பட்ட மேற்படி பணம் மற்றும் ஆவணங்கள் தங்களிடம் உரியவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டு ஒப்படைக்கிறேன். Sd/- 27.09.2024, திரு.S.ரமேஷ், முதுநிலை வருவாய் ஆய்வாளர், 'சி' பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம். Sir, Received the complaint on today (27.09.2024) at 10.45 hrs and registering the complaint as Thoothukudi V&AC Cr.No.06/2024, U/s 7 of PC Act, 1988 as Amended in 2018. Sd/- 27.09.2024, S.Peter Paul Durai, Dy. Supdt. of Police, V&AC, Thoothukudi Detachment. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.S.ரமேஷ் அவர்களின் அசல் புகார் மனு மற்றும் மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிப கழகம் (டாஸ்மாக்), சிப்காட் அலுவலகத்தில் வைத்து தயார் செய்த செயல்முறைகள் ஆகியவற்றை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக திருமதி.J.அனிதா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

27.9.2024

Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi